**IN THE COURT OF ADHOC – (II)**

**CITY CIVIL COURT, CHENNAI –104**

**OS. NO: 1554/2023**

**Deposition of: PW1** **DATE: 25.06.2026**

**NAME: S. Vijaya**

**AGE: 62 Years**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்:**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வா.சா.ஆ.21 கடிதம் இரண்டாம் பிரதிவாதிக்கு அனுப்பபட்டது என்றால் சரிதான். அந்த கடிதத்தில் நிதி முறைகேடுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இதில் குறிப்பிடப்பட்டுள்ள நிதி முறைகேடுகள் அனைத்தும் 1ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்ற அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு எதிராக நடத்தப்பட்ட உள்விசாரணையில் 2ம் பிரதிவாதி திலீப் குமார் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.21 கடிதத்தில் அனைத்து நிதி முறைகேடுகளும் அனைத்தும் இரண்டாம் பிரதிவாதியால் செய்யப்பட்டது என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 1ம் பிரதிவாதி செய்த அனைத்து குற்றங்களும் 2ம் பிரதிவாதி ஏஜென்சியில் தான் செய்ததுடன் 2ம் பிரதிவாதி ஏஜென்சியின் அலுவலக முத்திரை பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த அலுவலக முத்திரைகள் 1ம் பிரதிவாதியின் டிராயரில் இருந்து 16.12.2016 அன்று எடுக்கப்பட்டது. 2ம் பிரதிவாதி தான் அனைத்து நிதிமுறைகேடுகளையும் செய்ததாக நாங்கள் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் 1ம் பிரதிவாதியை Scape goat ஆக சேர்த்து உள்ளோம் என்றால் தவறான குற்றச்சாட்டு. 1ம் பிரதிவாதி செய்த அனைத்து குற்றங்களும் எங்கள் நிறுவனத்தால் நிரூபிக்கப்பட்டது. திலீப் குமார் என்ற முகவரின் கவனக்குறைவாலும் அவருக்கு 1ம் பிரதிவாதியின் ஏஜென்சி வேலைகளுக்கு திலீப் குமார் எல்.ஐ.சி சட்டத்திட்டங்களுக்கு முரண்பாடாக உதவி செய்ததாலும் திலீப் குமார் 1ம் பிரதிவாதி மீது வைத்த நம்பிக்கையை முறைகேடாக பயன்படுத்தி 1ம் பிரதிவாதி குற்றங்கள் செய்ததாக எங்கள் நிறுவனத்தால் ஆதார பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. நான் சொல்லியுள்ள இந்த

சங்கதிகள் வா.சா.ஆ.12 விசாரணை அறிக்கையில் எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ.12 விசாரணை அறிக்கை 1ம் பிரதிவாதி சம்பந்தப்பட்ட விசாரணை அறிக்கையாகும். அதனால் நான் சொன்ன இந்த 2ம் பிரதிவாதி சம்பந்தப்பட்ட விவரங்கள் வா.சா.ஆ.12 அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. 1ம் பிரதிவாதி கொடுத்த பதிலில் தான் திலீப் குமாருக்கு அலுவலக வேலை நேரத்திலும் அலுவலக வேலை நேரம் இல்லாத சமயத்திலும் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி திலீப் குமாரிடம் வேலை செய்ததாக குறிப்பிட்டுள்ளார். 2ம் பிரதிவாதியை 1ம் பிரதிவாதி தவறாக பயன்படுத்திக்கொண்டார் என்பதை நிரூபிக்கும் வகையில் விசாரணை அறிக்கை வா.சா.ஆ.12 ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் விசாரணை அறிக்கையில் எந்தெந்த ஆவணங்கள் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணங்கள் எங்கள் அலுவலகத்தில் மினிட்ஸ் உடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்த மினிட்ஸ் ஆவணம் வா.சா.ஆ.12 விசாரணை அறிக்கையுடன்

இணைக்கப்படவில்லை என்றால் சரிதான். அந்த மினிட்ஸ் ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் தாக்கல் செய்யமுடியும். வழக்கு வாதுரையின் போது தாக்கல் செய்ய முடியும். 2ம் பிரதிவாதி எந்த குற்ற செயலும் புரியவில்லை என்றும் கவணக்குறைவாகத்தான் இருந்துள்ளார் என்றும் நான் சொல்கிறேனா என்றால் எல்.ஐ.சி விசாரணையில் 1ம் பிரதிவாதி முழுவதும் குற்றங்களில் ஈடுபட்டுள்ளார். அதற்காக 2ம் பிரதிவாதியின் ஏஜென்சியின் code, சீல், ஆகியவற்றை பயன்படுத்திய போது 2ம் பிரதிவாதியிடம் 1ம் பிரதிவாதி கையெழுத்துப் பெற்றுள்ளார். 2ம் பிரதிவாதியும் எல்.ஐ.சி நிறுவனத்தில் இருந்து நீக்கப்பட்டதுடன் அவரிடம் இருந்து வசூல் செய்யவேண்டிய பணத்திற்காக அவரது கமிஷன் தொகையில் கழித்தது போக பாக்கி தொகையை அவர் செலுத்த வேண்டும் என்று இந்த வழக்கில் கோரியுள்ளோம். எனவே 2ம் பிரதிவாதியும் குற்ற செயல் புரிந்ததால் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதிக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் அவரது

முகவான்மை நீக்கப்பட்டது. அவரது ரெனிவல் கமிஷன் தொகை அனைத்தும் நிறுத்தப்பட்டது. அந்த சமயத்தில் 2ம் பிரதிவாதிக்கு தரவேண்டிய கமிஷன் தொகையும் திரும்ப பெறப்பட்டு மீதமுள்ள தொகைக்கு வழக்கு போடப்பட்டது. வா.சா.ஆ.24 ஆவணம் 2ம் பிரதிவாதி எங்களுக்கு கொடுத்த பதில் கடிதம் ஆகும். அந்த கடிதத்தில் அனைத்து படிவங்களையும் 1ம் பிரதிவாதி தான் பூர்த்தி செய்தார் என்றும் 2ம் பிரதிவாதி அந்த படிவங்களில் கையெழுத்திட்டு எல்.ஐ.சி நிறுவனத்திடம் சமர்பித்ததாக குறிடப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். இறப்பு உரிமை அனைத்து படிவங்களையும் 1ம் பிரதிவாதி தான் பூர்த்தி செய்ததாகவும் 2ம் பிரதிவாதியிடம் கையெழுத்து பெற்று அலுவலக வேலைகளை 1ம் பிரதிவாதியே செய்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 2ம் பிரதிவாதி எங்கள் நிறுவன முகவர். படிவங்களை 2ம் பிரதிவாதி கையெழுத்திடாமல் சமர்பிக்கும் படிவங்களை எல்.ஐ.சி நிறுவனம் பிராசஸ் செய்யாது என்றால் புரோபோசல் படிவம் பாலிசி தாரரால் நிரப்பப்படவேண்டும். அந்த பாலிசி

தாரர்போடும் கையெழுத்திற்கு சாட்சியாக முகவர் கையெழுத்திடுவார். கையெழுத்து போட்ட மொழியும் புரோபோசல் படிவத்தின் மொழியும் வெவ்வேறு மொழியில் இருந்தால் படிவ விவரங்களை படித்து காண்பித்து புரியவைத்ததாக முகவர் கையெழுத்து இடுவார். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட படிவங்கள் நான் சொன்னது போல் வெவ்வேறு மொழிகளில் இல்லாததால் முகவர் சாட்சியாக மட்டும் கையெழுத்து போட்டுள்ளார். படிவங்களை 1ம் பிரதிவாதி நிரப்பியதால் மட்டுமே அவரை நிதி முறைகேடுகள் செய்தார் என்று குற்றம் சாட்ட இயலாது என்று சொன்னால் எல்.ஐ.சி நிறுவனம் சாதாரணமாக ஒரு ஊழியரை சரியான விசாரணையின்றி அவர் மீது குற்றம் சுமத்தி பணிநீக்கம் செய்யாது. எல்.ஐ.சி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டு அனைத்து விசாரணைகளும் செய்யப்பட்டு ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டு முழுமையாக நிரூபிக்கப்பட்ட பிறகே 1ம் பிரதிவாதி குற்றம் செய்துள்ளார் என்று நிரூபிக்கப்பட்டுள்ளது. எல்.ஐ.சி நிறுவனத்தின் முகவருக்கு

குறைந்த பட்ச கல்வி தகுதி பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். முகவருக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும் என்றால் ரீஜினல் மொழி தெரிந்திருக்க வேண்டும். ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும் என்று எங்கேயும் குறிப்பிடப்படவில்லை. 2ம் பிரதிவாதிக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுதப்படிக்க தெரியுமா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. எங்கள் நிறுவனத்தின் 2ம்பிரதிவாதி கையெழுத்திட்ட அனைத்து படிவங்களும் ஆங்கிலத்தில் இருந்ததா அல்லது தமிழில் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. படிவத்தில் முகவர் என்ற முறையில் 2ம் பிரதிவாதி கையெழுத்திட்டால் அந்த படிவத்தில் உள்ள விவரங்கள் அனைத்தையும் தெரிந்து கொண்டு கையெழுத்திட்டார் என்று பொருள் காண வேண்டும் என்றால் தவறான கருத்து. பாலிசி தாரர் கையெழுத்திடும் பொழுது கையெழுத்துக்கு மேலே உள்ள பாராவில் அனைத்து விவரங்களையும் தெரிந்து கொண்டு பாலிசி தாரர் கையெழுத்திட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. முகவர் சாட்சி

கையெழுத்து போடுவது இந்த நபர்தான் கையெழுத்து போட்டார் என்பதற்கான சாட்சி கையெழுத்து ஆகும். படிவத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் பாலிசி தாரர்களுக்கு தான் தெரியும். 2ம் பிரதிவாதி கையெழுத்திட்ட படிவங்களில் உள்ள விவரங்கள் அனைத்திற்கும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றும் நான் சொல்வது போல் பாலிசி தாரரின் கையெழுத்துக்கு மட்டும் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றும் நான் உண்மையான விவரங்களை சாட்சியமாக அளிக்கவில்லை என்றும் சொன்னால் தவறான குற்றச்சாட்டு. மேலே சொன்னது போல கையெழுத்திடும் மொழியும் புரோபோசல் படிவத்தின் மொழியும் வெவ்வேறாக இருந்தால் மட்டுமே கையெழுத்திற்கு கீழே உள்ள பாராவில் முகவர் தான் அனைத்து விவரங்களையும் பாலிசி தாரருக்கு விளக்கி கூறியதாக சொல்லி கையெழுத்திடுவார். பாலிசி தாரர் எழுதி படிக்க தெரியாதவராக இருந்தால் மட்டுமே முகவர் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து மேற்கண்ட விவரங்கள் அனைத்தையும் பாலிசி தாரருக்கு விளக்கி கூறியதாக

உறுதி அளிப்பார். மேலே போடப்பட்ட முகவரின் கையெழுத்து சாட்சி கையெழுத்து மட்டுமே. வா.சா.ஆ.25 விசாரணை அறிக்கையில் 2ம் பிரதிவாதியின் வருகை சம்பந்தமாக கையெழுத்து பெறப்பட்டுள்ளதா என்றால் இந்த அறிக்கையில் 2ம் பிரதிவாதியின் கையெழுத்து இல்லை. அது எங்கள் அலுவலகத்தில் உள்ள மினிட்ஸில் உள்ளது. அந்த மினிட்ஸ் ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதிக்கு எதிராக புகார் 13 நபர்கள் கொடுத்துள்ளார்கள். அவர்களது பெயர் வாசுமதி, ஆனந்தி, துரைசாமி, கோமளா, ருக்மணி, ஸ்ரீனிவாசன், லெட்சுமி, ஆராவமுதன், சீனுவாசன், Hamithabeevi, Sultan beevi, ஆராவமுதன் மற்றும் மதிமோகன் ஆகியோர்களது புகார்கள் விசாரணை அறிக்கை வா.சா.ஆ.25 உடன் இணைக்கப்படவில்லை என்றால் Hamithabeevi, Sultan beevi ஆகியோர் இருவரை தவிர மற்றவர்கள் இறந்துவிட்டார்கள். அந்த இரு நபர்களின் புகார் வா.சா.ஆ.25 உடன் இணைக்கப்படவில்லை. ஏனெனில் அந்த இரு நபர்களின் க்ளைம் செட்டில்மென்ட்

1ம் பிரதிவாதியின் முகவரிக்கு அனுப்பபட்டதாக 1ம் பிரதிவாதி மீது புகார் கொடுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள அனைவரும் இறந்து விட்டதால் அவர்களது இறப்புரிமையை 1ம் பிரதிவாதி தவறான முறையில் எடுத்துக்கொண்டதாகத்தான் குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில் அவர்களது புகார் கடிதம் எங்கே என்ற கேள்வி ஏற்புடையது அல்ல. Hamithabeevi, Sultan beevi ஆகியோர்களை விசாரணையில் சாட்சிகளாக விசாரணை செய்தோமா என்றால் அவர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை. ஏனெனில் 1ம் பிரதிவாதி மீது கொடுக்கப்பட்ட புகாரில் காசோலை 1ம் பிரதிவாதி முகவரிக்கு அனுப்பபட்டதாக குற்றம் சாட்டப்பட்டதால் அவர்கள் இருவரையும் விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. வா.சா.ஆ.25 விசாரணையில் You have blamed 1st defendant and whether 1st defendant had been examined as witness 1ம் பிரதிவாதிக்கு எதிராகவும் 2ம் பிரதிவாதிக்கு எதிராகவும் தனித்தனியாக விசாரணை நடத்தப்பட்டுள்ள நிலையில் 2ம் பிரதிவாதிக்கு எதிரான விசாரணையில் 1ம் பிரதிவாதியை

சாட்சியாக விசாரிக்க வேண்டிய அவசியம் இல்லை. வா.சா.ஆ.25 அறிக்கை is a collusive document created by LIC to shield the second defendant illegally and unlawfully and put blames on 1st defendant என்றால் இந்த குற்றச்சாட்டு பொது துறை நிறுவனமான எல்.ஐ.சி மீது கூறப்படும் மிகப்பெரிய குற்றச்சாட்டு எல்.ஐ.சி நிறுவனம் முகவருக்கு ஆதரவாகவும் ஊழியருக்கு எதிராகவும் செயல்படவேண்டிய அவசியம் இல்லை. வா.சா.ஆ.25 அறிக்கை முழுவதும் உண்மையான அறிக்கை ஆகும்.

1ம் பிரதிவாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.